2018 ஜூலை 9]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற கேள்விக்கு தெரிவித்த அதே பதிலைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன். இருந்தாலும்கூட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் ஆணையின்படி, தற்போதுகூட கும்பகோணம் நகராட்சி, ராஜபாளையம் நகராட்சி, ஆம்பூர் நகராட்சி, திண்டிவனம் நகராட்சி, செங்கல்பட்டு நகராட்சி ஆகிய நகராட்சிகளில் முறையே 55 கோடியே 10 இலட்சம், 258 கோடியே 25 இலட்சம், 205 கோடி, 230 கோடி மற்றும் 124 கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் படிப்படியாக ஒவ்வொரு திட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த நகராட்சியில், துறை அதிகாரிகளால் ஆய்வு செய்து, நிதி நிலைமையினைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 285, மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

285—

புதிய கால்நடை மருத்துவமனை

***13548—திரு. தூசி கே. மோகன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யாறு தொகுதி, மேனல்லூர் கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மேனல்லூர் கிராமத்தில் 9,887 கால்நடை அலகுகள் இருப்பதால், அரசாணை எண் 14, கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை, நாள் 5–2–2018–ன்படி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய மேனல்லூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம், 2 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் செலவில் 6–3–2018 அன்று புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டு, தற்போது செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கால்நடை மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று கோரியுள்ளார்கள். கால்நடை மருத்துவமனையை நேரடியாக அமைப்பதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள்.

திரு. தூசி கே. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகத் தமிழ்ச் சமுதாயத்தின் ஒப்பற்ற தலைவி, 8 கோடி தமிழ் மக்களின் இதயங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிற எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருவடிகளை வணங்குகிறேன்.

"காட்சிக்கு எளியன் கடுஞ்சொல்லன் அல்லனேல்
மீக்கூறும் மன்னன் நிலம்"

என்ற திருவள்ளுவப் பெருந்தகையின் கூற்றுக்கேற்ப எளிதில் காணக் கிடைப்பவராகவும், கடுகடுத்துப் பேசாதவராகவும் இருக்கின்ற மன்னன், உலகத்தார் அனைவராலும் போற்றப்படுவார் என்ற நியதியின்படி, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு தமிழகத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியை நடத்திக் கொண்டிருக்கின்ற, மக்கள் கேட்கின்ற திட்டங்களையெல்லாம்

2018 ஜூலை 9]

வாரி வழங்கி, தமிழகத்தை சொர்க்க பூமியாக மாற்றிக் காட்டிய எங்கள் குடிமராமத்து நாயகன், நேற்றைக்குக்கூட குடிமராமத்து திட்டத்திற்கு 328.95 கோடி ரூபாயை வழங்கி, அந்தத் திட்டத்தைக் கண்காணிக்க 7 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமித்து, ஆணை வழங்கி தமிழகத்தில் பொற்கால ஆட்சியை நடத்திவரும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களை வணங்குகிறேன். தென்பாண்டி சிங்கம், ஜல்லிக்கட்டு நாயகன், கழகத்தையும், ஆட்சியினையும் வழிநடத்திவரும், தமிழகத்தின் துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன்.

என்னுடைய செய்யாறு தொகுதி, வெம்பாக்கம் ஒன்றியம், மேனல்லூர் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைத்துத் தந்த மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செய்யாறு தொகுதி, செய்யாறு ஒன்றியம், ஏனாதவாடி கிராமத்தில் சுமார் 3,000 கால்நடைகள் இருக்கின்றன. அரசு விதிகளின்படி 5 கிலோ மீட்டர் தூரத்தில் கால்நடை மருத்துவமனை இருக்கின்ற ஒரு பெரிய கிராமம் ஆகும். ஏனாதவாடி கிராமத்திற்கு புதிய கால்நடை மருத்துவமனை ஒன்றை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். செய்யாறு தொகுதி, வெம்பாக்கம் ஒன்றியம், என்னுடைய கிராமமான தூசி கிராமத்தில் சுமார் 5,000 கால்நடைகள் இருக்கின்றன. அதைச் சுற்றியுள்ள 10 கிராமங்கள் பயன்பெறும் வகையில், தூசி கிராமத்தில் புதிய கால்நடை மருத்துவமனை ஒன்றை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களால் அறிவிக்கப்பட்ட புழக்கடை (குறுக்கீடு) ஒரே ஒரு கேள்விதான்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் ஒரு கேள்வியை முதலில் கேளுங்கள். இரண்டாவது கேள்வி கேட்பதற்கு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது. நீங்கள் கேள்வியை அடுக்கிக்கொண்டே போக வேண்டாம், கேள்வியை முடியுங்கள்.*

திரு. தூசி கே. மோகன்: *மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் புழக்கடை கோழி வளர்ப்புத் திட்டம்*

அறிவிக்கப்பட்டது. அனைத்து மாவட்டங்களிலும் 38,500 பெண் பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டதை மேலும் ஊக்குவிக்கின்ற வகையில், 45,000 பெண் பயனாளிகள் பயன்பெறும் வகையில் விரிவுபடுத்தி, இத்திட்டத்தை நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களையும் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன் அவர்கள் தன்னுடைய சொந்த ஊரான தூசியில் கால்நடை கிளை நிலையம் அமைக்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி, விதிகளுக்கேற்ப முதலில் அங்கு கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், கால்நடை மருத்துவமனை அமைப்பதைப் பொறுத்தவரையில், முதலில் கால்நடை கிளை நிலையம், பிறகு கால்நடை மருந்தகம், அதன் பிறகுதான் கால்நடை மருத்துவமனை அமைக்கப்படும். ஆகவே, உறுப்பினர் கேட்ட முதல் இரண்டு கேள்விகளுக்கும் துறை அதிகாரிகளை அங்கு அனுப்பி ஆய்வு செய்து, அந்தப் பகுதியில் தேவையிருப்பின் கால்நடை கிளை நிலையம் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் தலைமையிலே பல்வேறு திட்டங்களை கால்நடை பராமரிப்புத் துறையின் மூலமாகச் செயல்படுத்தி வருகின்றது என்று தெரிவித்தார்கள். அந்தவகையில், தமிழ்நாட்டில் நாட்டுக் கோழி முட்டை மற்றும் இறைச்சியின் தேவை அதிகரித்துள்ளதால், புழக்கடை கோழி வளர்ப்புத் தொழில் பெருமளவில் வெற்றியடைந்துள்ளது. எனவே, புழக்கடை கோழி வளர்ப்பை மேலும் ஊக்குவிக்க சென்னை மாவட்டம் நீங்கலாக மற்ற அனைத்து மாவட்டங்களிலும் ரூ.25 கோடி செலவில் 38,500 பெண் பயனாளிகளுக்கு தலா 50 கோழிகள் வழங்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவை விதி

110–ன்கீழ் இந்த மாமன்றத்தில் 6–6–2018 அன்று அறிவித்தார்கள். இந்த அறிவிப்பிற்கு பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது. நாட்டுக் கோழி வளர்ப்பில் பொது மக்கள் மிகுந்த ஆர்வம் காட்டுவதால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, இந்தத் திட்டத்தை மேலும் விரிவுபடுத்தும் பொருட்டு சென்னை மாவட்டம் நீங்கலாக அனைத்து மாவட்டங்களிலும் 25 கோடி ரூபாய் செலவில் மேலும் 38,500 பெண் பயனாளிகளுக்கு தலா 50 கோழிகள் வழங்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். இதன்படி, மாநிலத்தில் உள்ள 385 ஊராட்சி ஒன்றியங்களிலும் தலா 200 பயனாளிகளுக்கு, பயனாளி ஒருவருக்கு 50 நாட்டு இன கோழிக் குஞ்சுகள்வீதம் மொத்தம் ரூ.50 கோடியில் 77,000 பயனாளிகளுக்கு வழங்கப்படும் என்ற சிறப்பு மிக்க செய்தியை இந்த மாமன்றத்திற்குப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஏற்கெனவே, விலையில்லா ஆடுகள் 8,72,000 பயனாளிகளுக்கும், விலையில்லா கறவை மாடுகள் 75,440 பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளன. இதுபோக, மீதமுள்ள பயனாளிகளுக்கு இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்றும், ரூ.50 கோடி செலவில் 77,000 பயனாளிகளுக்கு நாட்டுக் கோழி வளர்ப்புத் திட்டத்தை விரிவுபடுத்தவும் ஆணை பிறப்பித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு கால்நடை பராமரிப்புத் துறையின் சார்பில் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொண்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தூசி கே. மோகன், நீங்கள் ஏற்கெனவே நிறைய கேள்வி கேட்டுவிட்டீர்களே. இன்னும் கேட்க வேண்டியிருக்கிறதா? (குறுக்கீடு) சரி, சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. தூசி கே. மோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்றி சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தங்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 286, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஒய். பிரகாஷ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*